

# சிலுவைப் பாதை - 2019

உருவாக்கம்: ஆ. விஜயன்
Vijayan.eie@gmail.com
+971-559373636

**இயேசுவின் இதய துடிப்புகளில்...**

***(in the heart beats of Jesus)***

*இயேசுவின் கல்வாரி பாதை, நமது வாழ்வின் பாதை. இந்த சில நேரங்கள் இயேசுவோடு பயணம் செய்வோம். நம்மை நலமாக்கும் கடவுள் அவர். நமது சிந்தை, எண்ணம், ஏக்கம், மனதின் காயம், கீறல், உடலின் நோய்கள், வாழ்வின் தடுமாற்றங்கள், பார்வையின் போலிகள், லட்சியத்தின் பாதை மாற்றங்கள், தோல்வியின் வீழ்ச்சிகள் இவை அனைத்திலும் இருந்து நம்மை நலமாக்கும் தெய்வம் இப்போது கல்வாரிக்கு நம்மை அழைக்கிறார். அவரோடு செல்வோம். அவர் நமக்காய் செய்த மீட்பின் வரலாற்றை நமதென ஏற்போம். இயேசுவின் இதயத்தின் துடிப்பு நமதாகட்டும்.*

*திருச்சிலுவைப் பாதையின் ஒவ்வொரு நிலையின் தொடக்கத்திலும் இறுதியிலும் கீழ்வரும் செபங்களைச் சொல்லவும்:*

**தொடக்கத்தில்:**

*திவ்விய இயேசுவே, உம்மை ஆராதித்து வணங்கி, உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கிறோம்.*

*ஏனெனில், உமது திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.*

**முடிவில்:**

*எங்கள்மேல் இரக்கமாயிரும், ஆண்டவரே, எங்கள்மேல் இரக்கமாயிரும்!*

*இறந்த நம்பிக்கையாளர் அனைவரின் ஆன்மாக்களும் முடிவில்லா அமைதியில் இளைப்பாறுவனவாக! ஆமென்.*

## *முதல் நிலை - இயேசு தீர்ப்பிடப்படுகிறார்*

- *நடுவர் குற்றவாளி கூண்டில்.... குற்றவாளி நடுவர் நாற்காலியில்*

***சிந்தனை :*** ***'****இதோ மனிதன்' என்று பிலாத்து இயேசுவை அறிமுகப்படுத்துகிறார். படைத்த தெய்வம், பரமாளும் தெய்வம், மனிதர் முன்பாக, ஒரு 'முழு மனிதனாக', தீர்ப்புக்கு உள்ளாகி நிற்கிறார். இயேசு தீர்ப்பிடப்படும் இந்த நிலை, நான் எப்படி மற்றவரை தீர்ப்பிடுகிறேன் என்பதை சிந்திக்க அழைக்கிறது.*

*மற்றவர் குற்றவாளி என தீர்ப்பிடும் நான், எனக்கு நானே தண்டனை தீர்ப்பு அளிக்கிறேன். ஏனெனில் தீர்ப்பை பெறுவதற்கு உரிய செயல்களை நானே செய்கின்றேன். கடவுள் ஒரு போதும், ஒரு நொடியேனும் ஆள் பார்த்து செயல் படுவதில்லை. ஆனால் நானோ என் மனம் போல தீர்ப்பு சொல்லுகிறேன்.*

*நான் ஒரு குற்றவாளியாய் இருக்க, என் கண்ணில் உள்ள மரக்கட்டையை பாராமல் மற்றவர் கண்ணில் இருக்கும் சிறு துரும்பை அல்லவா நான் கூர்ந்து கவனிக்கிறேன். கடவுளின் நடுவர் இருக்கை முன் நிறுத்தப்படும் போது நான் என்னை குறித்தே கடவுளுக்கு கணக்கு கொடுக்க வேண்டும்.*

*எனவே என் தவறுகளுக்காக, என் பாவத்திற்காக, பிலாத்துவின் முன் கட்டி இழுத்து வரப்பட்ட இயேசுவை நோக்குவேன். நான் நிற்கவேண்டிய இடத்தில் எனக்கு பதிலாய் இயேசு நிற்கிறார். என் குற்றத்தை இயேசு ஆண்டவர் தன் மேல் ஏற்று கொண்டதால் பரபாவாகிய நான் விடுதலை பெற்றேன்.*

***ஜெபம் :*** *என் கணக்கற்ற குற்றங்களை மனமுவந்து மன்னித்த எல்லை இல்லாத இறை இரக்கமே , எனக்கு எதிராக குற்றம் செய்தோரை மன்னிக்க எனக்கு மனப்பக்குவத்தை தந்தருளும். மனக்காயம் நீக்கியருளும். ஆமென்.*

***தியானிக்க ஒரு வார்த்தை:*** *இயேசு அவரிடம் "நானும் தீர்ப்பு அளிக்கவில்லை. நீர் போகலாம். இனிப் பாவம் செய்யாதீர்" என்றார் (யோவான் 8:11)*

**<u>இரண்டாம் நிலை - இயேசு சிலுவை சுமக்கிறார்.</u>**

- *என் சுமை ...அவர் சுமையானது.*

***சிந்தனை :*** *ஒரு தந்தை தன் சின்ன பிள்ளையின் பாரங்களை எல்லாம் தன் தோளில் சுமந்து செல்வார். சிறிது நேரத்தில், அவன் நடக்கவே சோர்ந்து போகும் போது, அவனையே அவர் சுமக்கிறார். என் பாவத்தை சுமந்து, உலகிலுள்ள எல்லோரின் மீறுதல்களை, கீழ்படியாமையை, தன் மேல் ஏற்று, எனக்கு இளைபாறுதல் தர அவர் சுமை தாங்கியாய் மாறுகிறார்.*

*இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பே எனது துன்பத்தை இயேசு சுமந்தார். என் பிணிகளை மெய்யாகவே தாங்கி கொண்டார். இன்று என் வாழ்வில் எதிர்கொள்ளும் பாடுகள் என்னை சோர்விற்கு உள்ளாக்க முடியாது. காரணம் என் ஆண்டவர் அவற்றை ஏற்கனவே சுமந்து விட்டார்.*

*சிலுவை பற்றிய செய்தி அழிந்து போகிறவருக்கு மடமை. ஆனால் மீட்பு பெரும் எனக்கோ அது கடவுளின் வல்லமை. இயேசுவின் பின்னால் என் அனுதின சிலுவையை மன மகிழ்ச்சியோடு சுமந்து செல்வேன். இடுக்கமான வாயில் வழியாக நுழைய வருந்தி முயல்வேன். சிலுவை வழியே சிங்காசனத்தின் வழி.*

***ஜெபம்:*** *எம் சிலுவை நாயகரே , உமது அருள் எனக்கு போதும். என் வலுவின்மையில் தான் உம்முடைய வல்லமை நிறைவாக வெளிப்படும் என்பதை உணர்ந்து என் வலுவின்மையில், நெருக்கடியில், இடரில், இன்னலில், உமது கல்வாரி அன்பை முன்னிட்டு அகமகிழ்கிறேன். ஆமென்.*

***தியானிக்க ஒரு வசனம்:*** *நம்பிக்கையைத் தொடங்கி வழி நடத்துபவரும் அதை நிறைவு செய்பவருமான இயேசுவின் மீது கண்களைப் பதிய வைப்போம். அவர் தாம் அடையவிருந்த மகிழ்ச்சியின் பொருட்டு, இழிவையும் பொருட்படுத்தாமல் சிலுவையை ஏற்றுக்கொண்டார். (எபிரேயர் 12:2)*

**<u>மூன்றாம் நிலை - இயேசு முதல் முறை கீழே விழுகிறார்.</u>**

- *முதல் வீழ்ச்சி ... இயேசுவினால் மீண்டும் எழுச்சி*

***சிந்தனை :*** *அந்த மரம் உண்பதற்கு களிப்பூட்டுவதாகவும், அறிவு பெறுவதற்கு விரும்பத்தக்கதாகவும் இருந்ததை கண்டு முதல் முறை விழுந்த எனக்காக இங்கே இயேசு விழுகிறார். நான் செய்த பாவம் என்னை குத்துகிறது. மென்காற்று வீசும் பொழுதுகள் எனக்கு அனல் காற்றாய் மாறிற்று. என் ஆண்டவரின் குரல் எனக்கு அச்சத்தை கொடுப்பதாக மாறியது. என் பாவம் என்னை ஏமாற்றியது. நான் விழுந்து கிடக்கிறேன்.*

*கண்களுக்கு களிப்பூட்டிய, மனசான்றை மழுங்கடித்த வாழ்வு முறை இன்று என்னை வேதனைப் படுத்துகிறது. ஆகவே தான் என் மீட்பரே எனக்காக என் பாவ பாரத்தால் விழுந்து என்னை தூக்க எழுந்தார். விழுந்து போன மனிதத்திற்காக விழுந்து எழுந்து இறை சித்தம் நிறைவேற்ற புறப்டுகிறார்.*

*இதுவே ஊதாரி மைந்தனான என்னை அறிவு தெளிவு பெற செய்தது. நான் இனி பஞ்சத்தில், வறுமையில், பன்றிகள் மத்தியில் வாழ தேவை இல்லை. நான் எழுந்து என் தந்தையிடம் செல்வேன். பாவத்தில் நான் விழுந்து இருப்பினும், நான் என் தந்தையின் மகன் அன்றோ. ஆகவே என் அப்பாவின் வீட்டிற்கு செல்வேன். இனி நான் பாவத்தில் விழ மாட்டேன். ஒளிக்கும் இருளுக்கும் இனி சம்பந்தம் ஏது? கிறிஸ்துவுக்கும் சாத்தானுக்கும் என்ன உடன்பாடு?*

***ஜெபம் :*** *மன்னிப்பதில் செல்வம் மிகுந்த நல்ல தெய்வமே, பாவ சூழல்களில் இருந்து வெளியேறி , எழுந்து நடந்திட எனக்கு உமது அருளை தந்தருளும். ஆமென்.*

***தியானிக்க ஒரு வசனம்:*** *மனம் மாறத் தேவையில்லாத் தொண்ணூற்றொன்பது நேர்மையாளர்களைக் குறித்து உண்டாகும் மகிழ்ச்சியை விட, மனம் மாறிய ஒரு பாவியைக் குறித்து விண்ணுலகில் மிகுதியான மகிழ்ச்சி உண்டாகும் என நான் உங்களுக்குச் சொல்கிறேன். (லூக்கா 15:7)*

**நான்காம் நிலை - இயேசு தன் தாயை சந்திக்கிறார்.**

- *தாயின் சந்திப்பு... ஆறுதலின் மணித்துளிகள்*

***சிந்தனை :*** *ஆண்டவருக்கு மிகவும் ஆறுதல் தந்த சந்திப்பு இது. எனது நேரம் இன்னும் வரவில்லை என்று மூன்று வருடங்களுக்கு முன்பு சொன்னார். இதோ இப்போது அந்த நேரம் வந்தது. தண்ணீர் திராட்சை ரசமாய் மாறியது அன்று. திராட்சை ரசம், பிழியப்பட்டு இரத்தமாய் சிந்தபடுகிறது இன்று. மனுமக்களின் பாவத்திற்காக தன் மகன் இருக்கும் நிலையை பார்த்து வியாகுலம் அவளை சூழ்ந்து கொள்கிறது. இதற்காக தானே ஆண்டவர் வந்தார். இதற்காக தானே 34 ஆண்டுகளுக்கு முன்பு உம் சொற்படி ஆகட்டும் என்று சொன்னாள்.*

*பாவத்தின் கொடுக்கை முறியடிக்க, உனக்கும் பெண்ணுக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகையை உண்டாக்குவேன். அவள் வித்து உன் தலையை காயப்படுத்தும் என்று சாத்தானின் செயல்களை தோற்கடிக்க கடவுளாம் வல்லவர் ஏதேன் தோட்டத்தில் முன்னுரைத்தவை இன்று கல்வாரியில் நிகழ போகிறது.*

*என் பாவத்தால் உடைந்து தள்ளாடும் இயேசுவை பார்த்து மரியாவின் உள்ளத்தில் பாரம். அவள் இயேசுவின் தாயாக மட்டும் இருந்தால் நிச்சயம் இயேசுவை காப்பாற்றி இருப்பாள். ஆனால் அவள் என் தாயாக மாறி இருப்பதால், என் பாவ விமோசனம், என் ஆத்தும மீட்பு, இயேசுவின் சிலுவை பாடுகளில் தான் உள்ளது என்பதை உணர்ந்தாள். உள்ளத்தில் வாள் ஊடுருவினாலும், அவள் நம்பிக்கை தளரவில்லை. ஏதேன் தோட்ட சாபம் முடிவு பெற புதிய ஏவாளாக சிலுவை பயணம் பயணிக்கிறாள்.*

***ஜெபம்*** *: உம் மகனோடு விசுவாச பயணம் மேற்கொண்ட அன்னையே , எனது வாழ்வின் பயணத்தில் எல்லா வேளையிலும், நானும் இறை நம்பிக்கையை உறுதியுடன் பற்றிக்கொண்டு வாழ கற்று தாரும். ஆமென்.*

***தியானிக்க ஒரு வசனம்:*** *அவருடைய தாய் இந்நிகழ்ச்சிகளையெல்லாம் தமது உள்ளத்தில் பதித்து வைத்திருந்தார். (லூக்கா 2: 51)*

## ஐந்தாம் நிலை - இயேசுவுக்கு சீமோன் உதவுகிறார்.

- தோள் கொடுத்த சீமோன்...வேதனையில் தோழன்.

***சிந்தனை :*** *கள்வர் கையில் அகப்பட்டு, குற்றுயிராய் விடப்பட்ட மனிதன் மேல் பரிவு கொண்டு அவரை அணுகி, காயங்களில் திராட்சை ரசமும் எண்ணையும் வார்த்து, கட்டி, தான் பயணம் செய்த விலங்கின் மேல் ஏற்றி, ஒரு சாவடிக்கு கொண்டு போய் கவனித்த நல்ல சமாரியன் இதோ இங்கு, இயேசுவிற்கு தோள் கொடுத்த சீரேன் ஊரை சேர்ந்த சீமோனாக.*

*சீமோன் இயேசுவின் சிலுவையை தாங்குகிறார். கரம் கொடுக்கிறார். நானும் மன வலிமை கொண்டு வலுவற்றவரின் குறை பாடுகளை தாங்கி கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். ஒருவர் ஏழைகளுக்காக வாரி வாரி வழங்கும் போது அவரது நீதி என்றென்றும் நிலைக்கும் என்று மறைநூல் கூறுகின்றது. பிறருக்கு ஒரு கிண்ணம் நீரை கொடுக்கும் போது அது அவருக்கே கொடுப்பது தானே.*

*பொன் மோதிரமும், பளபளப்பான ஆடையும் அணிந்தவரை வரவேற்று, அழுக்கு கந்தையணிந்த ஏழை ஒருவரை ஒதுக்கினால் என்னில் மனிதம் இல்லை. இறைவனின் மக்கள் சொல்லிலும் பேச்சிலும் அல்ல, செயலில் உண்மையான அன்பை விளங்க செய்ய வேண்டுமே. ஒடுக்கப்பட்ட எளியவரின் குரலாக, தள்ளப்பட்ட பாமர மக்களின் சுமை தாங்கியாக , தன்னலம் என்னும் வேலிகளை உடைத்து , பரந்த மனம் என்னும் சிறகு கொண்டு வாழும் திருமறையாக வாழவே கடவுள் அழைக்கிறார்.*

***ஜெபம் :*** *என் தோழனாம் யேசுவே, பிறருக்கு உதவி செய்யும் போது நான் உமக்கே உதவுகிறேன் என்பதை உணர்ந்து, கட்டாயத்தால் அல்ல, இன்முகமாய் மன மலர்ச்சியோடு உதவ அருள் தாரும். ஆமென்.*

**தியானிக்க ஒரு வசனம்:** *ஒருவர் மற்றவருடைய சுமைகளைத் தாங்கிக் கொள்ளுங்கள்; இவ்வாறு, கிறிஸ்துவின் சட்டத்தை நிறைவேற்றுவீர்கள். (காலத்தியர் 6 : 2 )*

## ஆறாம் நிலை - வெரோனிக்கா இயேசுவின் முகத்தை துடைக்கிறார்

- *இறை சாயல்.... ஒரு வெள்ளை துணியில்.....*

***சிந்தனை :*** *வெரோனிக்கா எத்துனை இயேசுவை நேசித்து இருப்பார். தன் உயிரையும், தன் பாதுகாப்பையும், மற்றவர் என்ன கூறுவர் என்றெல்லாம் நினைக்காமல் இயேசுவின் திருமுகத்தை, துடைத்தாள். ஆனால் அந்த முகம் திருமுகமாக அழகின் முகமாக, ஒளியின் முகமாக இல்லை. இரத்தமும், பிட்கப்பட்ட, உடைக்கப்பட்ட சதையும், எலும்பும் தான் இருந்தது. கண்களெல்லாம் இரத்தம். முகம் முழுவதும் படைவீரர் துப்பிய எச்சில். தூசி படிந்த நிலை.*

*கதிரவனை போல ஒளிர்ந்த முகம் அது. இன்று இரத்தத்தால் மூடப்பட்டுள்ளது. நாம் பார்ப்பதர்கேற்ற அமைப்போ அவருக்கில்லை. நாம் விரும்பத்தக்க தோற்றமும் அவருக்கில்லை. வேதனையுற்று நோயுற்று நலிந்து காணப்பட்டார். இறை சாயலை மீண்டும் தர, பாவத்தால் நான் இழந்த பரிசுத்த சாயலை மீண்டும் எனக்கு தர அவர் தன் மகிமையை இழந்தார்.*

*வெரோனிக்கா தன் துணியில் இயேசுவின் சாயலை பெற்றது போல, நான் என் இதயத்தில், என் வாழ்வு பரிவு, இரக்கம், நல்லெண்ணம், கனிவு ஆகியவற்றால் அணி செய்ய பெறுவேன். புது இயல்பு பெற்று கிறிஸ்துவின் சாயல் என்னில் உருவாகும். நான் வெரோனிக்கா போல என்னில் தேவ சாயலை பெறுவேன்.*

***ஜெபம் :*** *காண முடியா பேரொளியில் வாழும் என் தெய்வமே, என் பாவத்தை சுமந்ததால், உம் அழகெல்லாம் இழந்து நிற்கிறீரே, உமது தெய்வீக சாயலை என்னில் எப்போதும் காத்திட உம் அருளை தாரும். ஆமென்.*

**தியானிக்க ஒரு வசனம்:** *"இருளிலிருந்து ஒளி தோன்றுக!" என்று சொன்ன கடவுளே எங்கள் உள்ளங்களில் அவரது ஒளியை வீசச் செய்தார். அது கிறிஸ்துவின் திருமுகத்தில் வீசும் கடவுளின் மாட்சியாகிய அறிவொளியே. (2 கொரிந்தியார் 4 : 6 )*

## ஏழாம் நிலை - இயேசு இராண்டாம் முறை தரையில் விழுகிறார்.

- *இரண்டாம் முறை.... நான் மீண்டும் எழ*

***சிந்தனை :*** *ஊதாரி மகன் ஒருமுறை தான் விழுந்தான். அறிவு தெளிந்து தந்தையிடம் சென்றான். அனால் நானோ மீண்டும் மீண்டும் தீய வாழ்வை வாழ்கிறேனே. எந்தெந்த பாவங்களை அறிக்கை செய்து விட்டு விடுகிறேன் என்று உறுதியான பிரதிக்கினை செய்தேனோ அவற்றையே மீண்டும் செய்கிறேன். எனவே தான் என் ஆண்டவர் என் பலவீனதிற்காக மீண்டும் இரண்டாம் முறையாக கீழே விழுகிறார்.*

*மனம் ஆர்வம் உடையதாய் இருந்தும், உடல் வலுவற்று போக, சோதனைக்கு உள்ளாகி போகிறேன். என் இறை உறவு துவண்டு போவதால் ஆழ் துயரம் கொண்டு இயேசு எனக்காக முகம் குப்புற விழுகிறார்.என் ஆண்டவரும் மீட்பருமாகிய இயேசுவை அறிந்தபின், உலகத்தின், பாவத்தின், சத்துருவின் அழிவு சக்திகளிலிருந்து வெளியேறிய பின் மீண்டும் அவற்றில் சிக்கி கொண்டால், என் பின்னைய நிலைமை முன்னைய நிலையை விட கேடு மிக்கதாய் இருக்கும்.*

*மெய் ஜோதியாம் இயேசுவை அனுபவித்த பின் மீண்டும் இருளுக்கு, அசுத்தத்திற்கு நான் எப்படி செல்ல துணிந்தேன்? புயலால் அடித்து செல்லப்படும் மேகமாய் நான் இருக்க போவது இல்லை. இனி அழிவிற்கு அடிமையாய் இருக்க மாட்டேன். ஆண்டவரின் வார்த்தையில் ஆழமாய் தோண்டி, இயேசு என்னும் பாறை மீது அடித்தளம் அமைத்து, என் வாழ்வு என்னும் வீடு கட்டுவேன். விழுந்து கிடக்கும் நான் இனி ஒரு நாளும் விழ போவது இல்லை.*

***ஜெபம்:*** *என் நேச கிறிஸ்துவே, உம்மை அறிந்து உம்மையே அன்பு செய்ய வேண்டும். உம்மை நேசிக்கும் நான் மீண்டும் உம்மை விட்டு பிரியாமல் இருக்க அருள் தாரும். ஆமென்.*

***தியானிக்க ஒரு வசனம்:*** *கிறிஸ்துவின் அன்பிலிருந்து நம்மைப் பிரிக்கப் கூடியது எது? எதுதான் நம்மைப் பிரிக்க முடியும்? (உரோமையர் 8: 35)*

## எட்டாம் நிலை - இயேசு எருசலேம் நகர பெண்களுக்கு ஆறுதல் கூறுகிறார்.

- *கண்ணீரின் முடிவு .. ஆன்மாவின் மீட்பு ...*

***சிந்தனை :*** *உருக்குலைந்து வேதனையோடு கல்வாரி ஏறுகிறார். இதை கண்ட சில கண்கள் கண்ணீர் விட்டன. அன்றொரு நாள் பாவியான ஒரு பெண்மணி இயேசுவின் காலடிகளை தன் கண்ணீரால் நனைத்தாள். அவள் பல பல பாவங்கள் செய்திருந்தாள். ஆனால் அவை எல்லாம் தள்ளுபடி செய்ததால், அவள் தன் தலைவனாம் யேசுவிடம் மிகுந்த அன்பு கொண்டு தன் தாழ்நிலை எண்ணி உணர்ந்து அழுதாள். பாதத்தையே கண்ணீரால் நனைத்தாள். மிகுதியாக மன்னிப்பு பெற்றாள்.*

*கண்ணீர் வீணாவது இல்லை. காரணம் அவர் தன் தோற்ப்பையில் என் கண்ணீர் துளிகளை சேர்த்து வைத்து இருக்கிறார். எனக்காக என் மக்களுக்காக என் தலை தண்ணீரால் நிறைந்ததாயும், என் கண்கள் கண்ணீரின் ஊற்றாகவும் இருக்க விரும்புகிறேன்.*

*ஆண்டவர் என்னிடம் விரும்புவது உண்மையான ஆழ்ந்த மனஸ்தாப கண்ணீர். ஒலிவ மலையில் கண்ணீர் விட்டு அழுதார். நான் பாவ, சாப, கல்லறையில் இருந்து வெளியே வரவே என் இயேசு கண்ணீர் விட்டு அழுதார். கோழி தன் குஞ்சுகளை தன் இறக்கைகளுக்குள் கூட்டி சேர்ப்பது போல என் ஆண்டவர் என்னை அரவணைக்க கண்ணீர் விட்டு புலம்பினார்.*

***ஜெபம்:*** *என் நேச இயேசுவே, உம் பாதம் விழுந்து கண்ணீர் சிந்தி என் ஆன்மாவிற்காகவும் , என் உறவுகளின் ஆன்மாவிற்காகவும் ஜெபிக்கிறேன். நீரே எம் கண்ணீர் யாவற்றையும் துடைக்கும் தெய்வம். ஆமென்.*

***தியானிக்க ஒரு வசனம்:*** *அவர் இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில், தம்மைச் சாவிலிருந்து காப்பாற்ற வல்லவரை நோக்கி உரத்த குரல் எழுப்பி, கண்ணீர் சிந்தி, மன்றாடி வேண்டினார். அவர் கொண்டிருந்த இறைப்பற்று கலந்த அச்சத்தை முன்னிட்டு, கடவுள் அவருக்குச் செவி சாய்த்தார். (எபிரேயர் 5 :7 )*

## ஒன்பதாம் நிலை - இயேசு மூன்றாம் முறை கீழே விழுகிறார்.

- *மூன்றாம் வீழ்ச்சி.....லட்சிய பாதையின் பயிற்சி.*

***சிந்தனை :*** *நான் சோர்ந்து போய், திசை தவறி போய் , பாதை தொலைப்பது , எனக்கு சரியான இலக்கு இல்லாமல் போவதால் தான். இயேசு கிறிஸ்து என்னை ஆட்கொண்டதற்கான நோக்கம் நிறைவேறுவதற்காக தொடர்ந்து நான் ஓட வேண்டும். அந்த நிறைவான லட்சியத்திற்கு தடைகள் கோடி வந்தாலும் , சோர்வுகள் தோன்றினாலும் , வீழ்ச்சிகள் என்னை தாழ்த்தினும் , கடந்ததை மறந்து விட்டு முன்னிருப்பதை கண் முன் கொண்டு , பரிசு பெற வேண்டிய இலக்கை நோக்கி தொடர்ந்து ஓடுவேன்.*

*இயேசு தன் வாழ்வில் ஒரு லட்சியம் கொண்டிருந்தார். 'என்னை அனுப்பினவரின் விருப்பத்தை செய்வதே என் குறிக்கோள்' என கூறி அதையே ஒவ்வொரு நாளின் நிகழ்வாக மாற்றினார். கல்வாரி பயணத்தில் மூன்றாம் முறை முகம் குப்புற தரையில் விழுகின்றார். ஆனால் தன் குறிக்கோளாம் இறை தந்தையின் திருவுளம் நிறைவேற்ற மீண்டும் புறப்படுகிறார்.*

*இலக்கை தொலைத்து, மாலை நேர இருள் சூழ்ந்து, பாதை மாறிய எம்மாவு சீடர்களுக்கு வழிப்போக்கனாய் இயேசு நடந்து அவர்கள் கண்கள் திறக்க செய்து பாதை உணர செய்தார். என் வாழ்வு என்னும் வழியில் அவரே பாதையை காட்டும் மன்னா. என் இலக்கு அடைய , என் சக்தியாக , என் வலிமையாக , நற்கருணையாக இயேசு வருகின்றார்.*

***ஜெபம்:*** *வழிகாட்டும் என் தெய்வமே, மூன்றாம் முறை விழுந்தாலும் ஒப்புரவு என்னும் அருட்சாதனத்தில் கண் திறக்கப்பட்டு , நற்கருணையில் உம்மை பெற்று தொடர்ந்து லட்சிய பயணம் செல்வேன். ஆமென்.*

***தியானிக்க ஒரு வசனம்:*** *யாக்கோபின் குடும்பத்தாரே, வாருங்கள் நாம் ஆண்டவரின் ஒளியில் நடப்போம் (ஏசாயா 2 :5 )*

## <u>பத்தாம் நிலை - இயேசுவின் ஆடைகளை களைகிறார்கள்.</u>

- *பாவ ஆடையை களைந்து ... தூய ஆடையை அணிந்து கொள்ள.*

***சிந்தனை :*** *முதல் மனிதர்கள் கடவுள் கட்டளையை மீறிய பின் தங்கள் பாவ நிலையை உணர்ந்தார்கள். தங்களை தாங்களே மீட்க, பாதுகாக்க எண்ணினார்கள். ஆகவே அத்தி இலைகளைத் தைத்து தங்களுக்கு ஆடைகளை செய்து கொண்டார்கள். இலைகளால் உண்டாக்கிய உடை எத்தனை நாள் தாங்கும்? சூரிய ஒளி பட பட அது காய்ந்து வதங்கி போகுமே. இது தான் மனிதனின் சுய முயற்சி, சுய சக்தி.*

*ஆகவே ஆண்டவராம் கடவுள் மனிதனுக்கு தோல் ஆடைகளை செய்து அவர்கள் அணிய செய்தார். இலை ஆடைகளுக்கு பதில் பல ஆண்டுகள் பயன் படுத்த கூடிய தோல் ஆடைகள். இந்த தோல் ஆடைகள் செய்ய ஒர் ஆட்டுக்குட்டி தேவை பட்டது. ஒர் ஆட்டு குட்டியின் தோல் உரிக்க பட வேண்டும். அந்த தோலே ஆடையாய் அம்மனிதருக்கு அணிவிக்கப்பட வேண்டும். அந்த ஆட்டுக்குட்டி , அந்த செம்மறி இயேசுவே.*

*ஏதேன் தோட்டத்தில் தோல் உரிக்கப்பட்ட செம்மறி இந்த கல்வாரி மலை மேலே ஆடையும் அதனுடன் சதையும் உரிக்கப்படுகிறார். எனக்கு மீட்பு என்னும் ஆடை தர இயேசு தன்னையே இழக்கிறார். எனக்கு வெண்மையான ஆடை தருகிறார். அது ஆட்டு குட்டியின் இரத்தத்தால் துவைக்கப்பட்டது. அதுவே என் இரட்சணியம். முதல்தரமான ஆடையை கொண்டு வந்து எனக்கு உடுத்தும் படி செய்கிறார்.*

***ஜெபம்:*** *இஸ்ராயேல் மக்கள் நாற்பது ஆண்டுகள் பாலைநிலத்தில் பயணம் செய்தபோது , அவர்கள் மேலுள்ள ஆடைகள் பழையதாய் போகாமல் பாதுகாத்த எம் இறையே, திருமுழுக்கில் நான் பெற்ற மீட்பு என்னும் ஆடையை தூய்மையாகவும் மதிப்புடனும் அணிந்து உமது நாளுக்காக விழிப்பாய் இருக்க அருள் தாரும். ஆமென்.*

***தியானிக்க ஒரு வசனம்:*** *தங்கள் ஆடைகளைக் கறைப்படுத்திக்கொள்ளாத அவர்கள் வெண்ணாடை அணிந்து என்னுடன் நடந்து வருவார்கள். (திருவெளிப்பாடு 3:4)*

## <u>பதினோரம் நிலை- இயேசு சிலுவையில் அறையப்படுகிறார்.</u>

- *சிலுவை மரத்தில்.. ஜீவ கனி.*

***சிந்தனை :*** *நான் இனிமேல் பாவத்திற்கு அடிமையாய் இராத படி என்னுடைய பழைய மனித இயல்பு இயேசுவோடு சிலுவையில் அறையப்பட்டு இருக்கிறது. காளைகள் போல் அவரை சூழ்ந்து கொண்டனர். அவரின் எலும்புகள் எல்லாம் கழன்று போயின. அவர் இதயம் மெழுகு போல உருகி உருவிழந்து போயிற்று. அவரின் வலிமை ஓடு போல காய்ந்து போனது. அவர் சாவின் புழுதியில் போடப்பட்டார். அவரின் கைகளையும் கால்களையும் துளைத்தார்கள்.*

*சிலுவை நாதரின் ஐந்து திருகாயங்களும் என் வாழ்வின் இரட்சணியம். பார சிலுவை மரத்தோடு அதன் கனி இணைக்கபடுகிறது. சாபத்தின் சின்னமாகிய இந்த சிலுவை மரம், இனி உயிர் தரும் மரமாய் மாறியது. கீழ்படியாமையால் பறித்து உண்ணப்பட்ட பழம் இங்கு இயேசுவின் முழுமையான கீழ்படிதலால் சாபம் நீங்கி வாழ்வாக மாறியது.*

*இந்த சிலுவையோடு இணைக்கப்பட்ட இயேசுவால் , ஆதியில் வாழ்வின் மரத்திற்கு செல்லும் வழியை காப்பதற்காக வைக்கப்பட்ட கேருபுகளும் சுற்றி சூழலும் சுடரொளி வாழும் எடுக்கப்பட்டது. இனி அந்த கனியை நான் உண்ணலாம். இயேசுவே அந்த மெய்யான கனி. இயேசுவே அந்த சாபம் நீக்கும் உயிருள்ள கனி. நான் இயேசுவின் சிலுவையோடு இணைந்து இருந்தால், திராட்சை செடியாம் இயேசுவோடு இணைந்து மிகுந்த கனி தருவேன்.*

***ஜெபம்:*** *சிலுவையில் அறையப்பட்ட இயேசுவே, என் ஊனியல்பை அதன் இச்சைகளோடும், இழி உணர்ச்சிகளோடும், சிலுவையில் அறைந்து விடுகிறேன். இனி என்னில் நீர் விரும்பும் அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை, பரிவு, நன்னயம், விசுவாசம், சாந்தம் , தன்னடக்கம் ஆகிய கனிகளே வளர, அருள் தாரும். ஆமென்.*

***தியானிக்க ஒரு வசனம்:*** *ஆண்டவரோடு சேர்ந்திருப்பவர் அவருடன் உள்ளத்தால் ஒன்றித்திருக்கிறார். (1 கொரிந்தியர் 6:17)*

**<u>பன்னிரெண்டாம் நிலை- இயேசு சிலுவையில் தன் உயிரை கையளிக்கிறார்.</u>**

- இயேசுவை உற்று நோக்குவேன் .... வாழ்வு பெறுவேன்.

***சிந்தனை:*** *அனைத்தும் நிறைவேறிவிட்டது என்பதை அறிந்து இயேசு 'தாகமாய் இருக்கிறது' என்றார். புளித்த திராட்சை இரசத்தை கடற் பஞ்சில் தோய்த்து ஈசொப்புத் துண்டில் பொருத்தி அவரது வாயில் வைத்தனர். அதை குடித்ததும் இயேசு , 'எல்லாம் நிறைவேறிற்று' என்று கூறித் தலை சாய்த்து தன் ஆவியை ஒப்படைத்தார்.*

*எனக்காக எல்லாம் நிறைவு செய்த இயேசுவின் அன்பு பெரிது, மாபெரிது. அவரின் அன்பு ஈடு இணையில்லாதது. சிலுவை காட்சியை சிந்தையில் நிறுத்துவேன்.உயர்த்த பட்ட இயேசுவை உற்று நோக்குவேன் . கடவுளின் வழி நடத்துலுக்கு எதிராக பாலை வனத்தில் இஸ்ராயேல் மக்கள் நடந்தனர். அந்த பாவத்தின் கூலியாக கொல்லி வாய் பாம்புகள் கடிக்கவே பலர் மாண்டனர். அதில் இருந்து விடுதலை பெற, ஆண்டவராகிய கடவுள் , வெங்கலத்தில் பாம்பொன்றை செய்து கம்பத்தில் பொருத்தி அதை பார்க்கிற ஒவ்வொருவரும் பிழைப்பர் என்றார்.*

*இதோ இங்கு, மானிட மகன் என் சாபம் எல்லாம் தன் மேல் ஏற்று உயர்த்த பட்டு இருக்கிறார். வெண்கல பாம்பை உற்று நோக்கினவர் அன்று வாழ்வு பெற்றனர். இந்த இயேசுவை நம்பிக்கையோடு உற்று நோக்கும் நான் வாழ்வு பெறுவேன், சுகம் அடைவேன். இனி என் நம்பிக்கைக்கு அடிப்படை இயேசுவின் சிலுவை மரணமே.*

***ஜெபம்:*** *உம்மையே பலியாக கொடுத்த என் இரட்சகரே, உமது திரு இரத்தத்தினால் என் வாழ்வை தூயதாகி, உமது மீட்பை நிறைவாய் அனுபவிக்க உம்மை நோக்கி பார்க்கின்றேன். மீட்பினை பெறுகின்றேன்.*

***தியானிக்க ஒரு வசனம்:*** *அந்த இரசத்தைக் குடித்ததும் இயேசு, "எல்லாம் நிறைவேறிற்று" என்று கூறித் தலை சாய்த்து ஆவியை ஒப்படைத்தார். (யோவான் 19: 30)*

**பதிமூன்றாம் நிலை- இயேசுவின் உடலை அவர் தாயின் மடியில் கிடத்துகிறார்கள்.**

- *தாயின் மடியில்... முதல் நற்கருணை விருந்து.*

***சிந்தனை :*** *நற்கருணை வழிபாட்டின் கடைசி நிகழ்வு. குரு தேவ அப்பத்தை உயர்த்தி, "இதோ கடவுளின் செம்மறி. இவரே உலகின் பாவத்தை போக்குபவர். செம்மறியின் விருந்துக்கு அழைப்பு பெற்றோர் பேறுபெற்றோர்." என இறை மக்களுக்கு அறிக்கை செய்து அழைப்பு விடுக்கிறார். கல்வாரி மலையில் முதல் நித்திய திருப்பலியிலே தூய கடவுளின் குருவாய், மரியா இயேசுவின் உடைக்கப்பட்ட உடலை சுமந்து அகில உலக மக்களுக்கு யேசுவே பாவம் சுமந்து தீர்த்த ஆட்டுக்குட்டி என்று அறிவித்து அவரில் வாழ அழைக்கிறார்.*

*அன்னையின் மடியில் இருப்பது உயிரற்ற ஒரு உடல் அல்ல. அதுவே உயிர் தரும் மெய்யான உணவு. வியாகுல தாய் தன் மகனை நினைத்து அழவில்லை. எனக்காகவே அழுகிறாள். இறை சித்தத்தை முற்றும் ஏற்று தியானித்து வந்தவள் , மீட்பின் பேருண்மையை எனக்கு தருகின்றவளாக , கடவுளின் திரு செம்மறியை எனக்கு உணவாக தருகின்றாள்.*

*அன்றொரு நாள், பெத்லகேமில் தம் ஒரே பேரான மகனை துணிகளில் பொதிந்து தீவன தொட்டியில் கிடத்தினார். இன்று அதே திருமகனை மடியில் கிடத்தியவராக உலகிற்கு அடையாளாம் காட்டுகிறாள். ஒவ்வொரு முறையும் திரு ப்பலியில் நான் அன்னையிடம் இருந்து இயேசுவின் பிட்கப்பட்ட உடலை வாங்கி செல்கிறேன் என்பதை நான் விசுவாசத்தில் உணருகிறேன்.*

***ஜெபம்:*** *வியாகுல தாயே, விசுவாச அன்னையே உன் மகனை நான் என் ஆத்துமத்தில் பெறும் போது நான் தகுதியுடன் அவரை பெற்றிட எனக்கு பரிசுத்தம் என்னும் புண்ணியத்தை பெற்று தாரும். ஆமென்.*

***தியானிக்க ஒரு வசனம்:*** *இதோ! கடவுளின் ஆட்டுக்குட்டி! ஆட்டுக்குட்டியாம் இவரே உலகின் பாவத்தைப் போக்குபவர். (யோவான் 1 : 29 )*

## <u>பதினான்காம் நிலை - இயேசுவை கல்லறையில் அடக்கம் செய்கிறார்கள்.</u>

- *விதைக்க படுவது... மாற்றுயிர் பெற.*

***சிந்தனை:*** *அகில உலகை, அண்ட சராசரங்களை, படைத்த வார்த்தையாம் கடவுள் இங்கு கல்லறையில், அரிமத்தியா ஊரை சேர்ந்த யோசேப்பு தனக்கென பாறையில் வெட்டி இருந்த புது கல்லறையில் அடக்கம் செய்யப்படுகிறார். மோசே, மோவாபு நாட்டில் உள்ள பள்ளத்தாக்கில் அடக்கம் செய்யப்பட்டார். யோசுவா, உரிமை நிலத்தின் எல்லையில் அடக்கம் செய்யப்பட்டார் என்றெல்லாம் நாம் பழைய ஏற்பாட்டில் உள்ள இறை மனிதர்கள் குறித்து வாசிக்கிறோம்.*

*ஆம். இது வரை.. மனிதன் மண்ணாக இருக்கிறான் மண்ணுக்கே திரும்புவான். முடிந்தது அவன் வாழ்வு. கல்லறையே கடைசி கதி என்றே அழுதனர். பிறப்புக்கு ஒரு காலம் உண்டு. இறப்புக்கு ஒரு காலம் உண்டு என்று காலத்தை நிறைவு செய்தனர். ஆனால் இங்கு உலக வரலாற்றில் ஒரு புதிய காலம் துவங்கி விட்டது. இயேசு ஆண்டவர் முக்காலத்திற்கும் மீட்பை பெற்று தருகிறார். வரலாற்றை மாற்றவே இயேசு இங்கு அடக்கம் செய்யப்படுகிறார். புது விடியல் ஒன்று இங்கு தொடங்குகிறது. ஒரு கல்லறையின் உடல் , மகிமையின் உடலாய் , அழிவு காணாமல் , விண்ணக சாயலை தாங்கி உயிர் பெற்று எழும் நிகழ்வே இந்த புதிய யுகத்தின் நுழை வாயில் .*

*நானும் ஒரு நாள் விதைக்க படுவேன். அழிவுக்குரியதாய் விதைக்கபடுவது மதிப்புக்குரியதாய் உயிர் பெற்று எழும். மறை பொருள் இதுவே. நான் சாக மாட்டேன். ஆனால் வேற்றுரு பெறுவேன். அழிவிற்கு உரிய இந்த உடல் அழியாமை அணியும்.*

***ஜெபம் :*** *என் அன்பு இயேசுவே, கல்லறையில் நீர் புதைக்கப்பட்டீர். அனால் மீண்டும் உயிர்த்து எழுந்து எமக்கு எதிர்நோக்கை கொடுத்தீர். உம்மில் நானும் ஒன்றித்து , புதிய உயிர் பெற்று எழுந்திட எனக்கு அருளினை தந்தருளும். ஆமென்.*

***தியானிக்க ஒரு வசனம்:*** *மறைநூலில் எழுதியுள்ளவாறு கிறிஸ்து நம் பாவங்களுக்காக இறந்து, அடக்கம் செய்யப்பட்டார். மறைநூலில் எழுதியுள்ளவாறே மூன்றாம் நாள் உயிருடன் எழுப்பப்பட்டார். (1 கொரிந்தியர் 15: 3, 4).*

*புதிய வாழ்வு தரவே இயேசு இந்த பாடுகள் பட்டார். இயேசு ஆண்டவர் தனது பாடுகள், இறப்பு மற்றும் உயிர்ப்பின் மூலமாக நமக்கு கடவுளின் பிள்ளைகள் என்னும் உரிமையை பெற்று தந்தார்.*

*ஆம் , நமது அடையாளம் "**நாம் கடவுளின் பிள்ளைகள்**" என்பதே.*

*அவரிடம் நம்பிக்கை கொண்டு அவரை ஏற்றுக்கொண்ட ஒவ்வொருவருக்கும் அவர் கடவுளின் பிள்ளைகள் ஆகும் உரிமையை அளித்தார் (யோவான் 1: 12)*

*உலகிற்குத் தண்டனைத் தீர்ப்பளிக்க அல்ல, தம் மகன் வழியாக அதை மீட்கவே கடவுள் அவரை உலகிற்கு அனுப்பினார். (யோவான் 3: 17)*

*இந்த திருச்சிலுவை பாதை நமக்கு அர்த்தத்தை கொடுக்கட்டும்.*

*அந்த அர்த்தம், இயேசுவில் நமக்கு தரப்படும் "கடவுளின் பிள்ளைகள்" என்னும் உரிமையே.*

